# இன்றைய வாசிப்பில் - அறிஞர் அண்ணாவின் சிறுகதைகள்!



**“இலக்கியம் என்னுடைய பிரச்சினையல்ல; வாழ்க்கைதான் என்னுடைய பிரச்சினை. வாழ்க்கையில் இன்பத்தைப் பெருக்க வேண்டும். வேதனையைக் குறைக்க வேண்டும். இதுதான் என் இறுதி லட்சியம். ஒரு தெளிவான சமூகக் குறிக்கோள் உள்ள எழுத்தாளன் நான். இந்தச் சமூக உறவுதான் என்னை எழுதவைக்கிறது.”**

**அண்ணாதுரை**

முதல் மற்றும் இரண்டாம் உலகப் போரினால் ஏற்பட்ட நன்மைகளில் ஒன்று,சிறுகதை என்ற இலக்கிய வடிவம். நாவல் வடிவத்தைப் போலவே சிறுகதை வடிவமும், ஆங்கில இலக்கிய வாசிப்பின் வழியே பெறப்பட்டது. தமிழில் இவ்வடிவத்தின் முன்னோடியாக வ.வெ.சு.ஐயரைக் குறிப்பிடலாம். அடுத்து பி.எஸ்.இராமையா, கு.ப.ராஜகோபாலன், ந.பிச்சமூர்த்தி, புதுமைப்பித்தன், சி.சு.செல்லப்பா, கா.சிவத்தம்பி, இளங்கோவன், சிதம்பர சுப்ரமணியன், பி.எம்.கண்ணன், மௌனி போன்றவர்கள் சிறுகதைகளை மட்டுமல்ல; பரிசோதனையிலான கதைகளையும் எழுதினார்கள். இவர்களுடைய வரிசையில் கு.அழகிரிசாமி, லா.ச.ராமாமிர்தம், தி.ஜானகிராமன், சுந்தர ராமசாமி போன்றவர்களும் சிறுகதை வடிவத்தைத் தமிழில் வளப்படுத்தினார்கள்.

இந்த எழுத்தாளர்கள், சிறுகதை வடிவத்திற்கு, உள்ளடக்கத்திற்கு, மொழிக்கு, நடைக்கு, பரிசோதனைக்கு முன்னுரிமை தந்து எழுதியவர்கள். இவர்களுடைய கதைகளில் தனிமனித சிக்கல், புலம்பல், குழப்பம், குடும்ப உறவுகளுக்கிடையிலான மோதல்களே அதிகம் பேசுபொருளாக இருந்தன. ஒருவகையில் இவர்கள் ஆச்சாரத்தைக்கடைப்பிடித்து மிகவும் ஆச்சாரமான முறையில் எழுதியவர்கள் எனலாம். இவர்கள் எழுதிய அதே காலகட்டத்தில் தமிழகத்தில் ஏற்பட்ட அரசியல்மாற்றங்களினால், சித்தாந்தங்களின் அடிப்படையில் இயக்கங்கள் உருவானதினால், இயக்கங்கள் உருவாக்கிய புதிய கொள்கைகளின் அடிப்படையில் பலருக்கு எழுதவேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. இந்தநிர்பந்தம் சமூகத்தில் நிலவிய மூடப்பழக்க வழக்கங்களுக்கு எதிராக, பரம்பரைத் தொழில்களுக்கு எதிராகக் கருத்துப் பிரச்சாரம் செய்ய வேண்டிய, கிட்டத்தட்டகலகம் செய்யவேண்டிய சூழல் இருந்தது.

இந்தச் சூழல் பல எழுத்தாளர்களை, சிந்தனையாளர்களை, போராட்டக்காரர்களை உருவாக்கியது. இவர்களை காலம் உருவாக்கிய, சமூகம் உருவாக்கிய எழுத்தாளர்கள் என்று சொல்லலாம். இனம், மொழி பற்றுடன், பழமைக்கு எதிரான குணம், அறியாமை, மடமை, மூடப்பழக்க வழக்கங்களுக்கு எதிரான நிலைப்பாட்டுடன் பலர் எழுதவந்தனர். அப்படிவந்தவர்களில் முக்கியமான வராகவும், முதன்மையான வராகவும் பேரெழுச்சியை உருவாக்கியவராகவும் இருந்தவர் அண்ணா. இவருடைய எழுத்து தமிழகத்தில் ஒரு இயக்கமாக வளர்க்கப்பட்டது. ஒருவருடைய எழுத்தே இயக்கமாக உருவாவது, உருவானது என்பது தமிழகத்தில் மட்டுமே நிகழ்ந்த அதிசயம். அந்த எழுத்தின் இயக்கம் இன்றும் தொடர்கிறது. அண்ணாவினுடைய எழுத்து என்பது தமிழில் புதியவகை எழுத்து இயக்கத்தை மட்டுமல்ல; ஒரு அரசியல் இயக்கத்தையும் உருவாக்கியது. அந்த வரலாறு எளிதில் அழிக்கக்கூடிய வரலாறாக இல்லை என்பதும் உண்மை. அண்ணாவினுடைய எழுத்து தமிழ் மொழியில், தமிழ்ச்சமூக வாழ்வில் பெரியமாற்றத்தை உருவாக்கியது. அவருடைய எழுத்தின் தாக்கம் இன்றும் இருக்கிறது.

**அண்ணாவுக்கு மேடைப் பேச்சாளர், அரசியல் தலைவர், நாடக ஆசிரியர் என்று பலமுகங்கள் உண்டு. மற்ற முகங்களைவிட சிறுகதை ஆசிரியர் என்ற முகம் மிகவும் முக்கியமானது. 1934 முதல் 1966 வரையிலான காலத்தில் அவர் மொத்தம் நூற்று பதிமூன்று சிறுகதைகளை எழுதியுள்ளார். 11.12.1934இல் வெளிவந்த ‘கொக்கரக்கோ’ என்பது அவருடைய முதல் சிறுகதை. 14.01. 1966இல் வெளிவந்த ‘பொங்கல் பரிசு’ என்பது அவருடைய கடைசி சிறுகதை. ‘கொக்கரக்கோ’ என்பது தமிழ்ப் பண்பாட்டில், கலாச்சாரத்தில், நம்பிக்கையை மையப் படுத்துவது. ‘பொங்கல் பரிசு’ என்பது மகிழ்ச்சியை, ஆனந்தத்தை, கொண்டாட்டத்தை, நிறைவை மையப்படுத்துவது. அண்ணா தன்னுடைய சிறுகதை களை கொக்கரக்கோவில் ஆரம்பித்து பொங்கல் பரிசில் முடித்துள்ளார்.**

இந்த ஒற்றுமை இயற்கையாக அமைந்த ஆச்சரியம், தமிழ்ச் சமூகத்தை இருட்டிலிருந்து வெளிச்சத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்பது அவருடைய நோக்கம். அந்த நோக்கத்திற்காகத்தான் அவர் எழுதினார். கறுப்பினப் போராளி மார்ட்டின் லூதர்கிங் ‘எனக்கொரு கனவு இருக்கிறது’ என்று சொன்னதுபோல ‘எனக்கொரு நோக்கம் இருக்கிறது, லட்சியம் இருக்கிறது’ என்று அண்ணா சொன்னார். அவருடைய நோக்கமும், கனவும் சமூகத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வான முரண்பாட்டை ஒழிப்பது தொடர்பானது. வாழ்விற்கான உரிமையையும், அதற்கான வேட்கையையும் முன்னிறுத்துவதே அவருடைய நோக்கம், லட்சியம். தமிழ்ச் சமூகம் மகிழ்ச்சியை, கொண்டாட்டத்தை இழந்ததற்கான காரணங்கள் என்ன, அவற்றை அடைவதற்கான வழிவகைகள் என்ன என்று ஆராய்வதுதான் அவருடைய சிறுகதைகளின் மையமான நோக்கம். ஒரு எழுத்தாளனுடைய நோக்கம்தான் அவன் எழுத்துக்கு வலிமையாக அமைகிறது.இந்த வலிமைதான் எழுத்தினுடைய மேன்மையாகவும், எழுத்தாளனுடைய மேன்மையாகவும் அமைகிறது. அரை நூற்றாண்டு காலம் முடிந்துவிட்ட பிறகும், அண்ணாவினுடைய சிறுகதைகளைப் பற்றி பேசுவதற்குக் காரணம் அக்கதைகளினுடைய வலிமையும், மேன்மையும்தான்.

ஒரு எழுத்தாளனுடைய மொத்த படைப்புகளையும் படித்து பிறகு யோசிக்கும்போது நம்முடைய நினைவில் பத்து, இருபது கதைகள் நினைவில் நின்றாலே பெரிய விஷயம். இது நம்மால் பெரியபெரிய எழுத்தாளர்கள் என்று போற்றப்படுபவர்களுடைய எழுத்துக்கும்கூட இந்த நிலைமைதான். ஆனால் அண்ணாவினுடைய சிறுகதைகள் இதற்கு நேர்மாறான குணத்தைக் கொண்டிருக்கின்றன. அரைநூற்றாண்டு காலத்திற்கு மேலாகியும் அவருடைய கதைகளைப் படிக்க முடிகிறது, ரசிக்க முடிகிறது என்பதோடு அக்கதைகள் இக்காலத்திற்கும் பொருத்தமானதாக, தேவையானதாக இருக்கிறது என்பது ஆச்சரியமான விஷயம். சராசரி சம்பவ நிகழ்வைப் பதிவு செய்திருந்தால் ஒரு கதைசொல்லியின் வேலையை மட்டுமே செய்து, அதிலேயே திருப்தி அடைந்திருந்தால் அவருடைய கதைகள் இன்று பேசுபொருளாக இருந்திருக்காது.

அண்ணா எழுத ஆரம்பித்த காலத்திலும், எழுதிக்கொண்டிருந்த காலத்திலும் நான்குவிதமான கதை எழுதும் போக்குகள் இருந்தன. தனிமனிதப் பிரச்சினைகள், சிக்கல்கள், பிடுங்கல்கள், மனப்போராட்டங்கள், உளவியல் பிரச்சினைகள், குடும்ப உறவுகளுக்கிடையிலான மோதல்கள், சிடுக்குகள், விரக்தி, நம்பிக்கையின்மை, மனக்குழப்பங்களை, சீர்குலைவுகளைப் பதிவு செய்வது என்று ஒரு பிரிவினர் இருந்தனர். இவ்வகையான எழுத்துகளையே இலக்கியமாக இலக்கியவாதிகள் அங்கீகாரம் செய்தனர்.

தனிமனித பிரச்சினைகளையும் சமூகப் பிரச்சினைகளையும் பதிவு செய்வதுதான் எழுத்தாளனின் வேலை. அதில் குறுக்கீடு செய்வதோ, விமர்சனம் செய்வதோ அல்ல என்பது மற்றொரு பிரிவினர்களுடைய எழுத்துப் போக்கு. மது விலக்கு, தீண்டாமை, கதர்இயக்கம், நாட்டுப்பற்று, விடுதலைப் போராட்டம், தேசிய இயக்கம், காந்திய சிந்தனைகளின் அடிப்படையில் எழுதுவது போன்றவை மூன்றாவது பிரிவினருடைய எழுத்து வகை. நடைமுறை சமூகவாழ்வில் இருக்கக்கூடிய அசலான பிரச்சினைகளையும், பிரச்சினைகளுக்கான காரணங்களையும், அதற்கான தீர்வுகளையும் முன் வைத்து எழுதியவர்கள் பலர். அண்ணா நான்காவது வகையைச் சார்ந்தவர்.



எழுத்தாளர்

இமையம்

**அண்ணாவினுடைய சிறுகதைகளின் மையமாக இருப்பதுமூடநம்பிக்கைகளுக்கு எதிரான கருத்துப் பிரச்சாரம், சாதிப் பிரச்சினைகளுக்கு, மத மோதல்களுக்கு, சமயப் பூசல்களுக்கு, புராண இதிகாசக் கட்டுக்கதைகளுக்கு, பெண்ணுரிமை, வரதட்சணைகொடுமைக்கு, குருட்டுத் தனத்திற்கு, பழமைக்கு, சமூகத்தின் மேல் அடுக்கில் இருப்பவர்கள் சமூகத்தின் கீழ் அடுக்கில் இருப்பவர்கள் மீது செலுத்திய குரூரமான ஒடுக்குமுறைக்கு, சித்திரவதைக்கு எதிரான கருத்துத்தான்.**

**அவருடைய மொத்த கதைகளின் சாரமும், நோக்கமும் சமூக மேம்பாடு, முன்னேற்றம். சமூகத்தில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதுதான். சமூகப்பிரச்னைகளை அண்ணா 113 சிறுகதைகளின் மூலம்அலசி ஆராய்ந்தார் என்று சொல்வதுதான் சரியாக இருக்கும். அண்ணா தமிழ்மரபின் பிரதிநிதி. தமிழ் வாழ்வு குறித்த மதிப்பீடுகளே அவருடைய கதைகள். சமூகத்தை முன்னேற்றுவதற்கு, விமர்சனம் செய்வதற்கு, பிரச்சாரம் செய்வதற்கான கருவியாகக் கலைப்படைப்புகளைக் கருதினார். இலக்கியம் மக்களுக்கானது, அது மக்களைச் சென்று சேரவேண்டும் என்பதிலும் உறுதியாக இருந்தார். அதனால் தன்னுடைய கருத்தை, சிந்தனையை, எண்ணத்தைப் பரப்புவதற்குத் தகுந்த ஆயுதமாகச் சிறுகதை என்ற வடிவத்தைப் பயன்படுத்தினார்.**

சமூகத்தின் மீதான தன்னுடைய விமர்சனத்தை சிறுகதைகளின் வழியே செய்தார். தேவையான இடங்களில் தன்னுடைய விமர்சனத்தைக் கடுமையாகவும் வைத்தார். அவருடைய சிறுகதைகளின் நோக்கமே சமூகத்தினுடைய நியாய அநியாயங்களை விமர்சிப்பதும், விவாதிப்பதும்தான். அவர் வாழ்வை நான்கு சுவர்களுக்குள் காணவில்லை. மாறாகத் தெருவில் கண்டார். தன்னைச் சுற்றியிருந்த சமூக வாழ்வின் ஊடாகப் பயணம் செய்ததின் விளைவாகவும், வரலாற்றின் அடிப்படையிலிருந்தும், கோட்பாட்டின் அடிப்படையிலிருந்தும் உருவானதுதான் அண்ணாவினுடைய 113 சிறுகதைகளும்.

மூட நம்பிக்கைகளுக்கு எதிராகப் ‘பரிசு’ என்ற கதையையும், சாதிகள் இந்த மண்ணில் எவ்வளவு ஆழமாக வேர் ஊன்றியிருக்கிறது என்பதற்கு ‘சிங்கள சீமாட்டி’ (1939) என்ற கதையையும், மதப்பூசல்களுக்கு எதிராக ‘மதுரைக்கு டிக்கட் இல்லை’ (4.3.1945) என்ற கதையையும், பேய் பிசாசு போன்ற கட்டுக்கதைகளுக்கு எதிராக ‘யார் மீது கோபித்துக் கொள்வது’ (30.1.1955) என்ற கதையையும், மாந்திரீகத்தினால் ஏற்படும் கேடுகளுக்கு எதிராக ‘விழுப்புரம் சந்திப்பு’ (14.1.1965) என்ற கதையையும் எழுதியுள்ளார்.

முதலாளித்துவத்தின் சுரண்டல் போக்குகளை, கோரச் செயல்பாடுகளை பல்வேறு நிலைகளிலிருந்து ஆராய்ந்து ‘செவ்வாழை’ (1.15.1949), ‘ரொட்டித் துண்டு’, ‘பக்த பக்காத் திருடன்’ (11.6.1950), ‘பூபதியின் ஒரு நாள் அலுவல்’ (7.7.1946), ‘பொய்-லாப நஷ்டம்’ (18.11.1945), ‘நாடோடி’ (17.11.1945), ‘உடையார் உள்ளம்’ (14,01. 1966) என்ற சிறுகதைகளையும் எழுதியுள்ளார். இந்த நாட்டில் வரதட்சணை கொடுமையினால் எத்தனை பெண்களுடைய வாழ்க்கை சீர்கெட்டுப் போகிறது என்பதற்கு ஒரு உதாரணமாக ‘சோணாச்சலம்’ (20.09. 1947) என்ற கதையை எழுதியுள்ளார். பெண்களும் மனித உயிர்களே, அவர்களுக்கும் சகல உரிமைகளோடு வாழ்வதற்கு உரிமை உண்டு என்பதோடு பெண்கள் படும் அல்லல்களை, துன்பங்களை விவரிக்கும் விதமாக ‘வாலிப விருந்து’, ‘சுடுமூஞ்சி’ (3.2.1946), ‘கன்னி விதவையானாள்’ (14.1.1961) ஆகிய கதைகளையும் எழுதியுள்ளார்.

சகல விதமான மூடத்தனங்களுக்கும், சமயப்பூசல்களுக்கும், ஏமாற்று வேலைகளுக்கும், கட்டுக்கதைகளுக்கும், கீழ்மைத் தனங்களுக்கும், மோசடி கபட நாடகங்களுக்கும் பிராமணியமே அடிப்படையான காரணம் என்பதைத் தோலுரித்து காட்டும் விதமாக ‘அறுவடை’ (14.1.1955), ‘பேரன் பெங்களூரில்’, ‘மேலதிகாரி’ (15.1. 1956), ‘சொல்வதை எழுதேண்டா’ (24.2.1946) ஆகிய சிறுகதைகளை எழுதியுள்ளார். காதல் என்ற பெயரால் நடக்கும் மோசடிக்கும், கபட நாடகத்திற்கும் ஆளாகி அவதிப்படும் பெண்களுடைய வாழ்வை சித்தரிக்கும் விதமாக ‘தங்கத்தின் காதலன்’ (1939), ‘புரோகிதனின் புலம்பல்’, ‘அவள் மிகப் பொல்லாதவள்’ (18.6. 1939), போன்ற கதைகளை எழுதியுள்ளார். இக்கதைகளில் வரக்கூடிய மோகனா, ஏமலதா, சரசா போன்ற பெண்களுடைய வாழ்க்கை சீர்கெட்டது போல இன்றும் காதல் என்ற கபட நாடகத்தால் அல்லலுறும் எத்தனையோ பெண்களுடைய வாழ்க்கையை நாம் பார்க்கவே செய்கிறோம்.

ஏழைகளின் மீதான பணக்காரர்களுடைய அன்பு, இரக்கம் பச்சாதாபம் என்பதெல்லாம் நாடகமே என்பதை ‘இரு பரம்பரைகள்’ (6.1.1946) என்ற கதையில் காண முடியும். பெண்களுடைய உரிமைக்காகவும், வாழ்விற்காகவும் குரல் கொடுப்பதோடு பெண்ணிய நோக்கில் ‘அவள் விபச்சாரியானாள்’(7.11.1946), ‘வழுக்கி விழுந்தவள்’ (14.01.1965) ஆகிய கதைகளையும் எழுதியுள்ளார்.

அண்ணாவினுடைய சிறுகதைகள் நடைமுறை வாழ்வியல் சிக்கல்கள், பிரச்சினைகளை மட்டும்தான் உரத்தக் குரலில் பேசும் என்பதில்லை. வரலாறுகளையும், வரலாற்றில் நடந்துள்ள மோசடிகளையும், ஏமாற்று சித்து வேலைகளையும் தர்க்கப்பூர்வமாக ஆராயும் என்பதற்கு ‘புலிநகம்’ (20.1.1946), ‘பிடி சாம்பல்’ (18.5.1947), ‘திருமலை கண்ட திவ்விய ஜோதி’ (13.1.1952), ‘தஞ்சையின் வீழ்ச்சி’, ‘வெளியூரில் கொலம்பசு’ போன்ற கதைகளை உதாரணமாகச் சொல்லலாம்.

வரலாற்று அறிவு மட்டுமல்ல, சமூகத்தில் அன்றாடம் நடக்கும் நிகழ்ச்சிகள், சம்பவங்கள் குறித்து அறிவும் தெளிவும் அண்ணாவுக்கு இருந்தது என்பதற்குச் செய்தித் தாள்களில் வந்த விஷயங்களை வைத்தே ‘மானநஷ்ட வழக்கு’, ‘ஒருவன்தான் பிடிபட்டான்’, ‘சமயபுரத்தம்மன்’ ஆகிய கதைகளை எழுதியுள்ளதே சாட்சி, அண்ணாவினுடைய 113 சிறுகதைகளையும் படித்து முடித்த பிறகு அவருடைய பரந்துபட்ட அறிவு வீச்சு நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. அதோடு அவர் தொடாத விஷயங்கள் என்று எதுவுமில்லை என்பதும், ஒரு கதையினுடைய சாயலை மற்றொரு கதையில் காண முடியாது என்பதும், அவருடைய எழுத்தின் மேன்மைக்குச் சான்று.

அண்ணாவின் சிறுகதைகளினுடைய கரு, அமைப்பு, நோக்கம், உள்ளடக்கம், வெளிப்பாட்டுத் திறன், ஆளுமை, மொழி போன்றவற்றை வைத்து மூன்று வகைகளாகப் பிரிக்க முடியும். அது தொடக்ககாலச் சிறுகதைகள், இடைக்காலச் சிறுகதைகள், கடைசிக்காலச் சிறுகதைகள், தொடக்ககாலக் கதைகளில் பசி, வறுமை, நோய், அறியாமை, சாதி மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், உழைப்புச் சுரண்டல்கள் போன்ற பிரச்னைகளை நேரிடையாகவும், அப்பட்டமாகவும் பேசியதோடு அதற்கானத் தீர்வுகளையும் முன் வைத்தார்.

பொதுவாக தமிழ் இலக்கிய உலகம் பிரச்சினைகளையும், பிரச்சினைகள் உருவாவதற்கான காரணிகளையும் ஆராயும். ஆனாலும் முடிவை வாசகனுடைய தீர்மானத்திற்கு விட்டுவிடும். இதற்கு நேர்மாறான குணத்தை அண்ணாவினுடைய தொடக்ககாலக் கதைகள் கொண்டிருந்தன. இந்நிலைப்பாட்டை கதைக்குச் சாதகமாகவும் கொள்ள முடியும், பாதகமாகவும் கொள்ள முடியும். இடைக்காலக் கதைகள் பிரச்சினைகளை விரிவாகவும் ஆழமாகவும் ஆராய்ந்தது.இக்கதைகள் தீர்வை, முடிவை முன்வைப்பதற்குப் பதிலாக விவாதத்தையும் தர்க்கத்தையும் முன்வைத்தன. கடைசிக்காலக் கதைகளில் கருவுக்கு மட்டும் முக்கியத்துவம் தராமல் வடிவம், செய்நேர்த்தி, சொல்முறை, நுட்பம், செறிவு ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்.கடைசிக்கால கதைகளில்தான் அண்ணா உளவியல் சார்ந்த கதைகளான ‘ராஜபார்ட் ரங்கத்துரை பாகவதத்’ (6.6.1948), ‘மரத்துண்டு’ போன்றவற்றை எழுதினார். இக்காலத்தில்தான் அவர், ‘பேய் ஓடிப்போச்சி’ (31.8.1947), ‘சாது’ (16.11.1947) போன்று உருவகக் கதைகளையும் எழுதினார். இக்கதைகளில் முதிர்ச்சியையும், தேர்ச்சியையும் காண முடியும். இதே காலத்தில்தான் அவர் பாத்திரச் சித்தரிப்புக்கு ‘உபகாரி உலகநாதன்’ (26.7. 1964), ‘பித்தளையல்ல பொன்னேதான்’ (14.1.1965), ‘சுமார் சுப்பையா’ (14.1.1965), ‘சொக்கி’ (13.6.1965), ‘உடை போட்டதும்’ (14.1.1965) போன்ற கதைகளையும் எழுதியுள்ளார். ஒப்பீட்டு முறையிலான கதைகளையும் எழுதியுள்ளார். ஒரு எழுத்தாளனுடைய வாழ்க்கையில் வளர்ச்சிப் படிநிலைகள் தவிர்க்க முடியாதவை. இந்த வளர்ச்சிப் படிநிலைகள்தான் ஒரு எழுத்தாளனுடைய எழுத்தின் வலிமையைக் காட்டும்.

அண்ணாவினுடைய சிறுகதைகள் எல்லாமே அவருடைய இயக்க செயற்பாடுகளில் ஒன்றாகத்தான் இருந்தது. அவருடைய அரசியல் பார்வைதான் சமூகத்தைக் கூர்ந்து பார்க்க வைத்தது. அதனால் தான் அவருடைய எழுத்து உலகம் பரந்து விரிந்ததாகவும் இருந்தது. அதனால்தான் அவருடைய சிறுகதைகள் தினசரி வாழ்க்கையின் நிகழ்வுகளால் நிரம்பியதாக - அன்றாட வாழ்க்கையின் பிரதிபலிப்பாக இருந்தது. காலத்தின் பதிவாகவும் இருந்தது.

**அண்ணாவினுடைய சிறுகதைகள் பிரச்சா ரத்திற்காக எழுதப்பட்டிருந்தாலும் அவருடைய சிறுகதைகள் சிறுகதைகளுக்குரிய எல்லாக் குணத்தையும் கொண்டிருந்தன என்பதை மறுக்கமுடியாது: தெளிவான நடை, குறிப்பாக உணர்த்துதல், நுட்பமாகச் சித்தரித்தல், எள்ளல், அங்கதம், ஒப்பீடு, நகைச்சுவை,உருவகம், கவிதைக் குணம் கொண்ட வாக்கியமைப்புகள் என்று அனைத்துக் கூறுகளும் நிறைந்திருப்பதைக் காண முடியும். அதே நேரத்தில் திரித்துக் கூறுதல், சுற்றி வளைத்துப் பேசுதல் என்பது அவருடைய சிறுகதைகளில் காண முடியாத ஒன்று. சிறுகதைகளில் சோதனை முயற்சியாக கற்பனைச் சித்திரம் என்ற வடிவில், படிப்பவர்களுக்கு அயர்ச்சி ஏற்படாதவாறு பிரார்த்தனை (14.3.1943), வள்ளித் திருமணம் (28.3.1943), பிரசங்க, பூஷணம்’ (4.2.1945), வேலைப் போச்சு (17.2.1946), நாட்டில் காடு (2.3.1947) ஆகிய கதைகளையும் எழுதினார்.**

பழைய மரபுகளை உதறித்தள்ளி புதிய மரபுகளை உருவாக்கிய சிறுகதைகள் அண்ணாவினுடையது. பிறரால் எளிதில் பின்பற்ற முடியாத நடை அவருடையது. சிறுகதைக்குரிய எல்லா குணங்களும் சிறப்பாக இருந்தும் நம்முடைய ஆச்சாரமான இலக்கிய விமர்சகர்கள் அண்ணாவினுடைய சிறுகதைகளை கொள்கை முழக்கங்களாக மட்டுமே பார்த்தார்கள். நம்முடைய விமர்சகர்கள் ஒரு படைப்பை அதனுடைய தரத்தை வைத்து மதிப்பிடாமல் அந்தப் படைப்பை எழுதிய எழுத்தாளனுடைய சாதி, அவன் சார்ந்துள்ள கட்சி, அவனுடைய பின்னணி போன்றவற்றை வைத்தே மதிப்பிடுகிறார்கள். இப்படிச் செய்வதற்குப் பெயர் இலக்கிய விமர்சனம் அல்ல. இக்கொடுமை அண்ணாவினுடைய சிறுகதை களுக்கும் நேர்ந்தது. புகழ்ச்சியையும், இகழ்ச்சியையும் தாண்டி அவருடைய கதைகள் இன்றும் பேசப்படுவதற்குக் காரணம் அக்கதைகளினுடைய பலம்தான். தனிமனித துக்கத்தை, சிக்கல்களை, பிரச்சினைகளை அண்ணா எழுதவில்லை, இதுதான் அவருக்கும் மற்ற எழுத்தாளர்களுக்குமுள்ள வேறுபாடு. சமூகக் கொடுமைகளுக்கு எதிரானது அவருடைய சிறுகதைகள். அக்கதைகள் சராசரியான கதைகளாக இல்லாமல் கலகக் குரலாக இருந்தது. முதல் கதையிலிருந்து கடைசி கதை வரை அவருடைய கலகக் குரல் ஒலித்துக்கொண்டே இருந்தது. ஏனென்றால் வாழ்வினுடைய நெருக்கடியிலிருந்து, சமூகத்தினுடைய நெருக்கடியிலிருந்து உருவானது அவருடைய சிறுகதைகள்.

எழுத்தாளனுக்கும், சமூகத்திற்குமான உறவு என்ன? ஒரு எழுத்தாளன் அவன் வாழ்கிற காலத்தில் செய்ய வேண்டிய பணிகள் என்ன என்ற கேள்விகளுக்கு அண்ணாவினுடைய சிறுகதைகளில் பதில் இருக்கிறது. அவருக்குத் தெளிவான நோக்கம் இருந்தது. அந்த நோக்கத்திலிருந்தும் லட்சியத்திலிருந்தும்தான் அவருடைய சிறுகதைகள் உருப்பெற்று வந்தன. நோக்கமில்லாமல், குறிக்கோள் இல்லாமல் எழுதப்படுகிற இலக்கியப் படைப்புகளுக்கு சமூகத்தில் என்ன மதிப்பு இருக்க முடியும்? இந்நிலையிலிருந்துதான் அண்ணாவினுடைய சிறுகதைகளை மதிப்பிட வேண்டும்.

**அண்ணா எந்தெந்தப் பிரச்சினைகள் தீர வேண்டும், ஒழிக்கப்பட்ட வேண்டும் என்று எழுதினாரோ அந்தப் பிரச்சினைகள் இன்றுவரை ஒழிந்தபாடில்லை. சாதிக் கொடுமை, தீண்டாமை, பசி, பிணி, வறுமை, அறியாமை, பொய்மை, போலித்தனம், சமயப்பூசல், இளமை மணம், காதலுக்குத் தடை, தெய்வத்தின் பெயரால் ஏற்பட்ட கட்டுக்கதைகள், புராண, இதிகாச புரட்டுகள் போன்ற பிரச்சினைகள் இந்த மண்ணில் இருக்கும் வரை வைதீகச்சூழ்ச்சியின் பிடியில் தமிழ்ச் சமூகம் சிக்கித் தவிக்கும் வரையில் சமூகத்தைச் சீர்குலைக்கக்கூடிய பிரச்சினைகள் இருக்கும்வரை அண்ணாவினுடைய சிறுகதைகளும் இருக்கும்.**